# <u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்.</u>

முன்னிலை : **செல்வி. N. திலகேஸ்வரி, B.Sc., LLM.,**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ)**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**

2024-ஆம் ஆண்டு, மார்ச் திங்கள், 19-ஆம் நாள், செவ்வாய்க்கிழமை

**<u>I.A. No. 6 of 2023 in O.S. No. 189 of 2010</u>**
**<u>(CNR No. TNSA13-000100-2010)</u>**

G. ராமன்
வாதியின் பொது அதிகார முகவரான
R. அக்கினோ மூலமாக .. மனுதாரர் / வாதி

எதிராக

1. பாவாயி அம்மாள் (இறந்தவர்)
2. A. ஷாஜகான்
3. M. ஜெகநாதன்
4. ராணி
5. பேபி (எ) அங்கம்மாள் .. எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இம்மனுவின் மீதான விசாரணையானது, கடந்த 09.01.2024-ஆம் தேதியில் இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபோது, மனுதாரர் / வாதி தரப்பில் வாதியின் பொது அதிகார முகவரான திருமதி. R. அக்கினோ (Party in person) அவர்கள் ஆஜராகியும், 1-ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்ட நிலையில், 2, 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. V. குமரவேல் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டும், இரு தரப்பு ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**.. 2 ...**

**<u>உத்தரவுரை</u>**

மனுதாரர் / வாதி இம்மனுவை எதிர்மனுதாரர்களுக்கு எதிராக இடைக்கால தடை உத்தரவு வேண்டி தாக்கல் செய்துள்ளார்.

2. **<u>மனுதாரர் / வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம் :</u>** மனுதாரர் / வாதி இம்மனுவை 1-ம் வாதியின் பொது அதிகார முகவர் என்ற முறையில் தாக்கல் செய்வதாகவும், 2010-ம் ஆண்டிலிருந்து 1-ம் வாதி தான் தானே முன் நின்று வழக்கை நடத்தி வந்ததாகவும், அவருக்கு வயது மூப்பு ஏற்பட்டதால் இடை மனு எண் 5/2023-ன் மூலம் பொது அதிகார முகவர் என்ற முறையில் தான் முன்னிலையாகி இவ்வழக்கை நடத்தி வருவதாகவும், எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் அரசியல் செல்வாக்கு, பண பலம், படை பலம் உள்ளவர்களாக இருப்பதாலும், நீதிமன்றத்திற்கு தகவல் தெரிவிக்காமலும், எவ்வித அனுமதியும் பெறாமலும் தாவா சொத்தை விற்பனை மூலம் பாராதீனம் செய்து வருகிறார்கள் என்றும், சொத்துரிமை மாற்றுச் சட்டம் 52-க்கு முரணானது என்றும், வழக்கு முடியும்போது தாவா சொத்து முழுவதையும் விற்பனை செய்யப்பட்டுவிடும் என்றும், எனவே வழக்கு முடியும் வரையிலும் எதிர்மனுதாரர்களோ / பிரதிவாதிகளோ தாவா சொத்தை விற்பனையோ, பாராதீனமோ அல்லது வில்லங்கமோ செய்யாமல் இருக்க வேண்டுமென்று இடைக்கால தடையுத்தரவு வழங்க வேண்டுமென கோரியுள்ளார்.

3. **<u>3-ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, 2-ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம் :</u>** வழக்கு சொத்தில் எந்த பகுதியும் இந்த எதிர்மனுதாரர்களுக்கு உரிமையாக இல்லை என்பதால் அவர்கள் மீது இடைக்கால உறுத்துக்கட்டளை எதையும் மனுதாரர் கோர முடியாது என்றும், மேலும் அசல் வழக்கு முறையானபடி உரிய நீதிமன்றக் கட்டணம் செலுத்தி தாக்கல் செய்யப்படாமல் உள்ளது என்றும், வழக்கை இழுத்தடிக்க வேண்டியே இம்மனு தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகவும் கூறியுள்ளனர்.

4. மனுதாரர் / வாதி தனது எழுத்துப்பூர்வமான வாதுரையில், எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித சான்றாவணங்களும் இது வரையிலும் குறியீடு செய்யப்படவில்லை என்றும், சொத்துரிமை மாற்றுச் சட்டம் பிரிவு 52-ன்படி நீதிமன்றத்தில் தாவா சொத்து சம்மந்தமாக வழக்கு நிலுவையில் இருக்கும்போது தாவா சொத்தை பாராதீனம் செய்யக்கூடாது என்று சட்டத்தில் கூறப்பட்டுள்ளது என்றும், நீதிமன்றத்தில் தகவலோ, முன் அனுமதியோ பெறாமல் தாவா சொத்தை வீட்டு மனைகளாக பிரித்து விற்பனை செய்வது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், வழக்கிற்கு தகுந்த நீதிமன்ற கட்டணம் செலுத்தப்பட்டிருப்பதாகவும், மனுதாரர்கள் / வாதிகளுக்கு பூர்வீகமாகவும், பரம்பரையாகவும், சட்டப்படியும் பாத்தியப்பட்ட சொத்துக்களை எழுத்தறிவில்லாத, எழுதப்படிக்கத் தெரியாத சுமார் 90 வயதுள்ள 1-ம் பிரதிவாதியான பாவாயி அம்மாள் அவர்களை தூக்கி சென்று ஆத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் கடந்த 19.08.2009-ல் சட்ட தகுதியற்ற நபரிடம் கைநாட்டு பெற்று 2, 3 எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தாவா சொத்தை அபகரித்துள்ளார்கள் என்றும், கடந்த 09.10.2009 தேதியன்று வாதியை தாக்கி கொடுங்காயம் ஏற்படுத்தி, கொலைமிரட்டல் விடுத்து குடும்பத்தையே ஒழித்துவிடுவதாக பயமுறுத்தியும் வலுக்கட்டாயமாக தூக்கி சென்று 2, 3 எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் ஏற்படுத்தியுள்ள விடுதலைப் பத்திரம் சட்டத்திற்கு முரணானது என்றும் கூறியுள்ளார்.

4. இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

5. மனுதாரர் / வாதி இம்மனுவை எதிர்மனுதாரர்களுக்கு எதிராக இடைக்கால தடை உத்தரவு வேண்டி தாக்கல் செய்துள்ளனர். அசல் வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்ததில் அசல் வழக்கானது வழக்கு சொத்தைப் பொறுத்து 1-ம் பிரதிவாதி 2, 3 பிரதிவாதிகளுக்கு 19.08.2009 தேதியன்று ஏற்படுத்தியுள்ள கிரய பத்திரத்தை ரத்துசெய்து இல்லா நிலையது என விளம்புகை செய்ய வேண்டி மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. அசல் வழக்கில் பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் எதுவும் கோரப்படவில்லை. மனுதாரர் / வாதி தன்னுடைய எழுத்துப்பூர்வமான

**.. 4 ...**

வாதுரையில் 2, 3 எதிர்மனுதாரர்கள் விடுதலைப் பத்திரம் ஏற்படுத்தியுள்ளதாகவும், வீட்டுமனைகளாக பிரித்து விற்பனை செய்திருப்பதாகவும் கூறியுள்ளபோதிலும், அந்த ஆவணங்கள் எப்போது யாரால் யாருக்கு எந்த தேதியில் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது போன்ற விவரம் எதுவும் மனுவிலோ, இறுதி வாதத்திலோ எதுவும் குறிப்பிடவில்லை. அசல் வழக்கிலேயே நிரந்தர தடை உறுத்துக்கட்டளை கோராத நிலையில் மனுதாரர் / வாதி கோரியுள்ள இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரத்தை வழங்க இயலாது என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் மனுதாரர் / வாதி தங்களுடைய மனுவில் ஏற்கனவே தாவா சொத்தை எதிர்மனுதாரர்கள் பாராதீனம் செய்து வருவதாக கூறியுள்ளார்கள். ஆனால் எந்த தேதியில் என்ன வகையான வில்லங்கம் எதிர்மனுதாரர்களால் தாவா சொத்தைப் பொறுத்து ஏற்படுத்தப்பட்டது என்பது குறித்து எவ்வித சங்கதியும் மனுதாரர்களால் மனுவில் கூறப்படவில்லை. அது தொடர்பான ஆவணங்களும் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. தாவா சொத்தை வழக்கு நடைபெற்று கொண்டிருக்கும்போது யார் யாருக்கு விற்றார்கள், எந்த தேதியில் விற்றார்கள் போன்ற எவ்வித விவரமும் மனுதாரர் தரப்பில் மனுவில் கூறவில்லை. மேலோட்டமான சங்கதிகளை மட்டும் கூறி மனுதாரர் / வாதி இடைக்கால உறுத்துக்கட்டளை கோரியுள்ளார். மனுதாரர் தனது மனுவில் 2, 3 எதிர்மனுதாரர்கள் எந்த எதிர்மனுதாரர் சொத்தைப் பொறுத்து வில்லங்கம் ஏற்படுத்தியுள்ளனர் என்பது குறித்து கூட குறிப்பிட்டு எந்த சங்கதியும் சொல்லவில்லை. எனவே மனுவில் தகுந்த சங்கதிகள் எதுவும் கூறப்படாமல் பொதுவான சங்கதிகளை கூறிவிட்டு எந்தவித ஆவண சாட்சியமும் தாக்கல் செய்யப்படாமலும் மனுதாரர் / வாதி கோரியுள்ள இடைக்கால உறுத்துக்கட்டளைப் பரிகாரத்தை வழங்க இயலாது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

6. இறுதியாக, மனுதாரர் / வாதி தாக்கல் செய்துள்ள இம்மனுவை இந்நீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிடுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவுரையானது என்னால் சுருக்கெழுத்துத்-தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, கணிணியில் தட்டச்சு

செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2024-ஆம் ஆண்டு, மார்ச் திங்கள், 19-ம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**(Sd/- N. திலகேஸ்வரி)**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**

**ஆத்தூர்.**

| | |
|---|---|
| மனுதாரர் / வாதி தரப்பு சாட்சிகள் : | இல்லை |
| எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் : | இல்லை |
| மனுதாரர் / வாதி தரப்பு சான்றாவணங்கள் : | இல்லை |
| எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் : | இல்லை |
| நீதிமன்ற சாட்சிகள் : | இல்லை |
| நீதிமன்ற சான்றாவணங்கள் : | இல்லை |

**(Sd/- N. திலகேஸ்வரி)**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**ஆத்தூர்.**

மு.மா.உ.நீ., (மு.கூ.பொ.) ஆத்தூர்.

கூ.மா.உ.நீ., ஆத்தூர்.

இ.ம.வ. எண் 6/2023

---------------

அ.வ. எண் 189/2010

அசல் / வரைவு உத்தரவுரை

நாள் : 19.03.2024